## 27.4 சமூக பொறுப்பில் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அதி.2) துறை.

அரசாணை (நிலை) எண். 117 நாள் : 02.7.2007

படிக்க :

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இயக்குநரின் கடிதம் எண். 71650/06/PRI– 3, நாள் 7–5–2007.

**ஆணை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் 12.4.07 அன்று ஏனையவற்றிற்கிடையே கீழ்க்காணும் அறிவிப்பை அறிவித்துள்ளார்.

**சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு விருது.**

> ‘‘ வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக (Corporate Social Responsibility) பாராட்டத் தக்க வகையில் பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் நடப்பாண்டிலிருந்து ஆண்டுதோறும் இத்தகைய சிறந்த நிறுவனங்களுக்கு, தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படும். இதற்காக 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.’’

2. மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு விருது வழங்குவதற்கு அந்நிறுவனங்களைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைகளை தொகுத்து ஆணை வெளியிடக் கோரி செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் விருது ஏற்படுத்தி, 2007–08ம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. இவ்விருது வழங்குவதற்கு தேர்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கான தகுதிகள், தேர்வுமுறை மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

4. மேலே பத்தி 3–ல் ஏற்படுத்தப்பட்ட விருது ஆண்டுதோறும் 5 சிறந்த நிறுவனங்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் 2007–2008 ஆண்டு முதல் வழங்கப்படும். 2007–2008–ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 25.00 இலட்சம் அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதியகணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2515. 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102 – சமுதாய நல வளர்ச்சி – II மாநிலத் திட்டம் – KN சமூகப் பொறுப்புணர்வுள்ள வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு விருது – 59 பரிசுகளும், வெகுமதிகளும் (த.தொகு. 251500/02 K N 5909.)

6. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி இயக்குநர் இருப்பார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இது ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கானச் சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BG1) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (B G1)

துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை 2007–08ம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை அனுப்பி வைக்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இத்திட்டத்தினை செயல்படுத்தும் போது அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து தேவைப்படின் மாறுதல்களைச் செய்து கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண். 144/DS(APA)/ 07 நாள் 28.6.2007. கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண். 370 (முன்னூற்று எழுபது) – ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**
அரசு செயலாளர் (பொறுப்பு)

## 27. AWARDS AND FUNCTIONS

(அரசாணை (நிலை) எண். 117 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை நாள் 02–7–07.

**இணைப்பு**

**1. தகுதிகள்**

i) அனைத்து தொழில் / சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அவை பொதுத்துறை / தனியார், கூட்டுத் துறை நிறுவனங்களாக இருந்தாலும் இவ்விருது பெற தகுதி உடையவை ஆகும்.

ii) அந்நிறுவனங்கள், பங்கு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்களாகவும் இருக்கலாம்.

iii) தொழில் / சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்புகளும் இவ்விருது பெறத் தகுதி உடையவை ஆகும்.

iv) மேற்படி நிறுவனங்கள் நேரடியாகவோ, அறக்கட்டளைகள் மூலமாகவோ, தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ, இதர முகமைகள் மூலமாகவோ செயலாற்றலாம்.

v) தனித்துவமான அறக்கட்டளைகள் / தொண்டு நிறுவனங்கள் மற்றும் மன்றங்கள் / சங்கங்கள் இவ்விருது பெற தகுதியற்றவை ஆகும்.

**2. பரிசீலனைக்கான கூறுகள்**

i) ஊரக வளர்ச்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படட பணிகளே விருது வழங்க எடுத்துக் கொள்ளப்படுமாயினும், நகரங்களில் குடிசை பகுதிகளில் பாராட்டத்தக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அத்தகைய பணிகளும் விருதுபெற தகுதியானவையாக எடுத்துக் கொள்ளப்படும்

ii) விவசாயம், கால்நடை, கல்வி, பொதுச் சுகாதாரம், குடிநீர் மழைநீர் சேகரிப்பு, மரபு சாரா எரிசக்தி, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், சுய உதவிக்குழுக்கள்& வாழ்வாதார மேம்பாடு, பெண்கள், குழந்தைகள். இளைஞர் நலன் மரக்கன்றுகள் நடுதல் ஆகிய சேவைகளில் சிறப்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் விருதுக்கு பரிசீலிக்கப்படும். மேலும் பல்வேறு சமூகநல மேம்பாட்டுப் பணிகளும் விருது வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும்.

iii) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பணிகள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

iv) நிறுவனங்களின் கடந்த 5 ஆண்டுகளின் செயல்பாடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**3. தேர்வு முறை**

**i)** இவ்விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கருத்துருக்கள் கோரி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு தொழில் வர்த்தக மற்றும் சேவை நிறுவனங்களுக்குக் கடித வாயிலாகவும், பத்திரிகை செய்தி மூலமாகவும் அறிவிப்பு வெளியிடப்படும்.

ii) மேலும், இவ்விருதுக்கான கருத்துரு தொடர்பான விளம்பரம் தமிழக அரசின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, 45 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும்.

iii) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் நேரடியாக பெறப்பட்டுள்ள நிறுவனங்களின் விண்ணப்பங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரால் உரிய நாளுக்கு பின்னர் சேகரிக்கப்படும்.

iv) சேகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை தலைவராகவும் சிறந்த வணிக பத்திரிகையாளர் ஒருவர் மற்றும் சிறந்த சமூக சேவகர் ஒருவரையும் கொண்ட தேர்வுக்குழு தகுதியுள்ள 30 நிறுவனங்களை தேர்வு செய்யும்.

v) தேர்வு செய்யப்பட்ட 30 நிறுவனங்களை களத்தில் சரி பார்க்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஏற்பாடு செய்வார். கருத்துருக்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் / விவரங்களுடன் உண்மை நிலையில் ஏதேனும் பெருத்த வேறுபாடு காணப்பட்டால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

vi) அதன் பின் தேர்வுக்குழுவால் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சிறந்த வணிகப் பத்திரிகையாளர், சிறந்த சமூக சேவகர் ஆகியோரைக் கொண்ட குழு ) மேற்கண்ட 30 நிறுவனங்களிலிருந்து 15 நிறுவனங்களை தேர்வு செய்து இறுதி முடிவெடுக்க அரசுக்கு அனுப்பி வைக்கும்.

vii) மேற்கண்ட தேர்வுக்குழு பரிந்துரைக்கும் பட்டியலிலிருந்து விருதுக்கான ஐந்து நிறுவனங்களை அரசு இறுதியாக தேர்வு செய்யும்.

**4. இதர நிபந்தனைகள்**

i) இவ்விருது பெற்ற ஒரு நிறுவனம் அடுத்த மூன்றாண்டுகளுக்கு விருது பெற பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ii) ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கு போதிய விண்ணப்பங்கள் பெறப்படவில்லை என்றாலும், பெறப்பட்ட கருத்துருக்கள் அரசு நிர்ணயித்த குறியீட்டிற்குள் இல்லையென்றாலும், குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்களை தேர்வு செய்யவோ அல்லது எந்த நிறுவனத்தையும் தேர்வு செய்யாமல் இருக்கவோ அரசுக்கு உரிமை உண்டு.

iii) குறிப்பிட்ட ஆண்டில் விருது பெற தகுதிபெறாத நிறுவனங்களின் பெயர் அடுத்துவரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்பட தடையில்லை.